செய்தி வெளியீடு எண்: 1 3 5 நாள் : 01. 04 .2015

**161 கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்**

**ஏப்ரல் '9-ல் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான வேட்புமனுத்தாக்கல்**

**ஏப்ரல் '15-ல் வாக்குப்பதிவு**

**மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு**

தமிழகத்தில் புதியதாக துவக்கப்பட்ட150 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர 11 கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பதவிகளை நிரப்புவதற்கான நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் ஏப்ரல் '15– ஆம் தேதி அன்று நடைபெறும் என்றும், இதற்கான வேட்புமனுத்தாக்கல் ஏப்ரல் '9-ஆம் தேதி அன்று நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு :-

**புதியதாக துவக்கப்பட்ட, புத்துயிரூட்டப்பட்ட மற்றும் நிர்வாகக்குழு கலைக்கப்பட்ட சங்கங்கள்**

தமிழகத்தில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை அபிவிருத்தி ஆணையரின் கட்டுப்பாட்டில் புதியதாக துவக்கப்பட்ட 150 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டில் செயல்படும் 3 கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்படும் 4 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ,தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை ஆணையர் கட்டுப்பாட்டில் செயல்படும் 2 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டில் செயல்படும் 2 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஆக மொத்தம் 161 கூட்டுறவுச் சங்கங்களில் 1741 நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கவும், இவர்களில் இருந்து 161 தலைவர் மற்றும் 161 துணைத்தலைவர்களை தேர்ந்தெடுக்க தேர்தல் அட்டவணையை தமிழ்நாடு மாநில

கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இச்சங்கங்களில் புதியதாக துவக்கப்பட்டவை 156-ம், புத்துயிரூட்டப்பட்டவை 3 -ம் மற்றும் நிர்வாகக்குழு கலைக்கப்பட்டவை 2-ம் ஆகும். நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான வேட்புமனு தாக்கல் ஏப்ரல் '9-ஆம் தேதியும், வாக்குப்பதிவு ஏப்ரல்'15-ஆம் தேதியும் நடைபெறும். தலைவர் மற்றும் துணைத்தலைவர் களுக்கான தேர்தல் 20.4.2015 அன்று நடைபெறும்.

இந்த 1741 நிர்வாகக்குழு உறுப்பினர்களில் 315 இடங்களுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவரும், 476 இடங்களுக்கு பெண்களும் மற்றும் 950 இடங்களுக்கு பொதுப்பிரிவினரும் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு கிடையாது.

<u>நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கான வேட்புமனுத் தாக்கல்</u>

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்புமனுக்களை 09.04.2015 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை தாக்கல் செய்யலாம். அன்று மாலை 5.30 மணிக்குள் வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு மாலை 6.00 மணிக்கு தகுதியான வேட்பாளர் பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

<u>வேட்புமனு திரும்பப்பெறுதல்</u>

தாக்கல் செய்த வேட்புமனுவை திரும்பப் பெற விரும்புவோர் 10.04.2015 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அன்று மாலை 5.00 மணிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

<u>வாக்குப்பதிவு</u>

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 15.04.2015 அன்று காலை 8.00 மணிக்குத் துவங்கி மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

<u>வாக்கு எண்ணிக்கை</u>

இந்த தேர்தலில் 15.04.2015 அன்று பதிவான வாக்குகளை எண்ணும் பணி மறுநாள் 16.04.2015 அன்று காலை 10.00 மணிக்குத் துவங்கும். வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டவுடன் முடிவுகள் அறிவிக்கப்படும்.

<u>தலைவர், துணைத்தலைவர் தேர்தல்</u>

தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிப்பு 16.04.2015 அன்று தேர்தல் அலுவலரால் வழங்கப்படும். தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 20.04.2015 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இத்தேர்தல் நடைபெறவுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பெயர் மற்றும் இதர விபரங்கள் குறித்து அந்தந்த மாவட்ட தொடர்புடைய தேர்தல் அலுவலரையும், மாவட்ட தேர்தல் பார்வையாளர்களான கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர்களையும் தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன், இ.ஆ.ப. (ஓய்வு) தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**ஆணையர்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**